செய்தி வெளியீடு எண். 88 நாள்: 08.02.2018

# திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 6 வட்டாட்சியர்களின் தலைமையில் வருவாய் கிராமங்களில் 09.02.2018 (வெள்ளிக்கிழமை) அன்று அம்மா திட்டம் நடைபெற உள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி **அனைத்து கிராமத்திலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்கும் திட்டமான அம்மா திட்டம் (AMMA–Assured Maximum Service to Marginal People in All Villages)** திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 6 வட்டாட்சியர்களின் தலைமையில் கீழ்கண்ட வருவாய் கிராமங்களில் **09.02.2018** (வெள்ளிக்கிழமை) அன்று காலை **10.00** மணிமுதல் மாலை **5.00** மணிவரை நடைபெற உள்ளது.

இதில் வருவாய்த் துறையின் முதியோர் ஒய்வூதியம் உள்ளிட்ட சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பட்டா மாறுதல், இலவச வீட்டுமனை பட்டாக்கள், உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ், குடும்ப அட்டை, குடிநீர் பிரச்சனைகள், நிலம் சம்மந்தமான பிரச்சனைகள் குறித்து கோரிக்கை மனுக்களாக அளிக்கலாம். இக்கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதியான நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் அன்றைய தினமே வழங்கப்பட உள்ளது. மேலும். உடனடி தீர்வு காணமுடியாத மனுக்கள் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு 30 நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும். அம்மா திட்டம் நடைபெறும் இடங்களில் மருத்துவத்துறை மூலம் இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தவும், பெண் சிசுக்கொலையை தடுத்தல் போன்ற விழிப்புணர்வு பதாகைகளை பொது மக்கள் நன்கு அறியும் வண்ணம் அமைக்கும்படியும், கால்நடை பராமரிப்புத்துறை மூலம் ஆடு, மாடுகளுக்கு இலவச சிகிச்சை பெறும் பொருட்டு முகாம் நடத்தப்படும் மற்றும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் இம்முகாம்களில் பங்குகொண்டு, பொது மக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கவும், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்), மாவட்ட சமூக நல அலுவலர், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்), விவசாயத்துறை, தோட்டக்கலைத்துறை போன்ற அனைத்துத் துறை அலுவலர்களும் அம்மா திட்டத்தில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு சேவை செய்ய வருகை புரிகிறார்கள் என **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள்** தெரிவிக்கிறார்.

# அம்மா திட்டம் 09.02.2018 (வெள்ளிக்கிழமை)

| வ. எண் | வட்டத்தின் பெயர் | அம்மா திட்டம் நடைபெறும் கிராமத்தின் பெயர் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | பொன்னேரி | உப்புநெல்வாயல் கிராமம் | கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் அருகில் உள்ள காலியிடத்தில் |
| 2. | திருத்தணி | சின்னம்மாபேட்டை கிராமம் | கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் அருகில் உள்ள காலியிடத்தில் |
| 3. | ஊத்துக்கோட்டை | தண்டலம் கிராமம் | ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் அருகில் உள்ள காலியிடத்தில் |
| 4. | கும்மிடிப்பூண்டி | நெல்வாய் கிராமம் | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி எதிரில் உள்ள காலியிடத்தில் |
| 5. | திருவள்ளூர் | பிரியாங்குப்பம் கிராமம் | பஞ்சாயத்து யூனியன் குடியிருப்பு அருகாமையில் உள்ள காலியிடத்தில் |
| 6. | பள்ளிப்பட்டு | கர்லாம்பாக்கம் கிராமம் | கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் அருகில் உள்ள காலியிடத்தில் |

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**